# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

www.dhinathdhalam.com

நடுநிலை நாளிதழ்

ஆசிரியர்: முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர்: முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 116 | வெள்ளிக்கிழமை Friday | 24.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# “வினாத்தாள் கசிவு விவகாரத்தில் விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி”

## பிரதமர் நரேந்திர மோடி உறுதி





வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மவுனம் கலைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் நிச்சயம் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளார்.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி, டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் தொடர் போராட்டத்தில்ஈடுபட்டுள்ளனர். இந்த இயக்கத்தினர் கடந்த ஜூலை 20-ம் தேதி நாடாளுமன்றம் நோக்கி பேரணியை மேற்கொள்ள முயன்றபோது அதை தடுத்த நிறுத்துகையில் போலீஸார் - போராட்டக்காரர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அப்போது போலீஸார் போராட்டக்காரர்களை தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டு வீசியும் கலைத்தனர். தடியடியின்போது போராட்டக்காரர்களை தலையில் தாக்கியதாகவும், ஆணியுடன் கூடிய லத்தி, கற்களை பயன்படுத்தியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறினர். இது தொடர்பாகடெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மவுனம் கலைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் நிச்சயம் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "நமது இளைஞர்களின் நலனும் எதிர்காலமும் தான் எதையும் விட முக்கியமானது. வினாத்தாள்கள் கசிவில் ஈடுபடுபவர்களுக்கு விரைவான மற்றும் கடுமையான தண்டனை வழங்கும் வகையில், விரைவுநீதிமன்றங்களை அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பான அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இது மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான நமது தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும். நமது இளைஞர்களின் எதிர்காலத்திற்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எவரும் தப்பிக்க முடியாது." என்று தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 152 வினாத்தாள் கசிவு சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் எந்த ஒரு குற்றவாளியும் நடவடிக்கைக்கு உள்ளாகவில்லை." என்று குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், இன்று (ஜூலை 23) பிரதமர் மோடி விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

டெல்லி ஜந்தர் மந்தரில் திரளும் இளைஞர்கள் அனைவரும் மத்தியில் ஆளும் பாஜக மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்திவரும் சூழலில், இளைஞர்கள் கொந்தளிப்பை குறைக்கும் வகையில் பிரதமரின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளதாக கூறப்படு கிறது.

ஆனால், பிரதமரின் ட்வீட்டுக்கு பதிலளித்துள்ள சிஜேபி, "தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்" என்று ஒற்றை வரியில் பதிலளித்து தங்களின் போராட்டம் தொடரும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

மேலும், டெல்லியில் இன்று 16 மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், "மோடி மொத்த டெல்லியையும் முடக்கத் தயாராக இருக்கிறார். ஆனால் தர்மேந்திர பிரதானை பதவிநீக்கம் செய்யத் தயாராக இல்லை" என்று சிஜேபி இயக்கத் தலைவர் அபிஜித் தீப்கே தெரிவித்துள்ளார். இந்நிலையில், பிரதமரின் வாக்குறுதிக்கு எதிர்வினையாற்றியுள்ளார் ராகுல் காந்தி. இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "நமது இளைஞர்களின் எதிர்காலத்திற்கு மிகப்பெரிய தீங்கு விளைவித்தது நீங்கள்தான். நமது கல்வி முறையை முழுமையாக கைப்பற்றவும், அழிக்கவும் நீங்கள் அனுமதித்தீர்கள், ஊக்குவித்தீர்கள் - மேலும் அதற்கு பொறுப்பான ஒவ்வொருவரையும் நீங்கள் பாதுகாத்தீர்கள். மாணவர்களின்கோரிக்கைகள் தெளிவானவை:

1. தர்மேந்திர பிரதானை பதவி நீக்கம் செய்யுங்கள்.

2. மாணவர்களிடம் மன்னிப்பு கேளுங்கள்.

3.மாணவர்களைதாக்கியவர்கள் மீது நடவடிக்கைஎடுங்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

# “நீட் விலக்கு கோரும் மாநிலங்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட வேண்டும்” தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை:'நீட்' தேர்விலிருந்து விலக்கு கோரும் மாநிலங்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட வேண்டும். மாணவர் சேர்க்கை முறைகளில் நிலவும் பன்முகத்தன்மையால் கல்வித் தரம் பாதிப்படையாது.மாறாக, அது சமத்துவத்தையும் சிறப்பான வெளிப்பாட்டையும் மேலும் வலுப்படுத்தக்கூடும் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில நாளிதழில் வெளியாகியுள்ள அவரது கட்டுரையில், "நீட் வினாத்தாள் கசிவைத் தொடர்ந்து வரலாறு காணாத வகையில் நாடு முழுவதும் மாணவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டங்கள், வெறும் ஒரு தேர்வின் நம்பகத்தன்மை சீர்குலைந்ததற்கான எதிர்வினை மட்டுமல்ல.

தகுதி அடிப்படையிலானது என முன்னிறுத்தப்பட்ட ஓர் அமைப்பின் மீதான ஆழமான நம்பிக்கையிழப்பையே அவை வெளிப்படுத்துகின்றன. லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நடைமுறையின் நேர்மை மீதான நம்பிக்கை தகரும்போது, அது ஒரு நாட்டின் மனசாட்சியையே உலுக்குகிறது.

நீட்டுக்கு எதிராக முதன்முதலில் எச்சரிக்கைக் குரல் எழுப்பிய மாநிலம் தமிழ்நாடுதான்.அதன் காரணம்,நீட் தேர்வு நடத்தப்பட்ட விதத்தில்முறைகேடுகள் இருந்தன என்பதல்ல.

மருத்துவம் படிக்க விரும்பும் ஒவ்வொரு மாணவரின் எதிர்காலத்தையும் ஒரு தேசிய நுழைவுத் தேர்வில் பணயம் வைத்து தீர்மானிக்க வேண்டும் என்ற அடிப்படைக்கொள்கையையே நாங்கள் கேள்விக்குட்படுத்தினோம். நடைமுறையில் பிரச்சினை என்பதைவிட அதன் அடிப்படையே பிரச்சினைக்குரியது. அண்மைய நிகழ்வுகள் எங்கள் கவலை முற்றிலும் நியாயமானது என்பதையே உறுதிப்படுத்தியுள்ளன.

நீட்டை அறிமுகப்படுத்தியபோது, ஒன்றிய அரசு மூன்று முக்கிய வாக்குறுதிகளை அளித்தது. முதலாவதாக, பல்வேறு நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டிய சுமையை அது குறைக்கும் என்று கூறப்பட்டது.

இரண்டாவதாக,மருத்துவச் சேர்க்கைகளில் நிலவி வந்த கேப்பிடேஷன் கட்டணம் மற்றும் வணிகமயமா க்கலை அது முற்றிலும் ஒழிக்கும் என உறுதியளிக்கப்பட்டது. நாடு முழுவதும் நடைபெற்று வரும் மாணவர் போராட்டங்கள், தேர்வு நடத்தும் முறைகளை மட்டும் மேம்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்தும் எச்சரிக்கை அல்ல. பெரும் தொகையையும் காலத்தையும்பணயமாக கோரும் தேசிய நுழைவுத்தேர்வுகள் என்றஒட்டுமொத்தக் கட்டமைப்பையே அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதற்கான எச்சரிக்கை மணியாக அவை அமைய வேண்டும்.

மாநிலங்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், மருத்துவத் துறையினர் மற்றும் இதில் தொடர்புடைய அனைவரோடும் திறந்த மனதுடன் ஒன்றிய அரசு கலந்தாலோசிக்க வேண்டும். ஒற்றைத்துவத்தையே இறுதி இலக்காகக் கருதும் மனப்போக்கை அது கைவிட வேண்டும். இந்தியாவுக்குத் தேவை அதிகாரக்குவிப்பு அல்ல. மாநிலங்கள் மீதும், மாநில அரசுப் பள்ளிகள் மீதும், மாணவர்கள் மீதும் அதிக நம்பிக்கை வைப்பதேநாட்டின் இன்றைய தேவை.மருத்துவக் கல்வியின் எதிர்காலம் இன்னும் நியாயமான, கூட்டாட்சித்தத்துவத்தை மேலும் மதிக்கும் அணுகுமுறையைக் கோருகின்றது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் விசாரணை கைதி மரணம்...

## மாவட்ட காவல்துறை பரபரப்பு விளக்கம்



தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், சட்ட விரோதமாக மது விற்றதாகவிசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட அருணாசலம் என்ற வாலிபர் மருத்துவமனையில் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விசாரணை என்ற பெயரில் போலீசார் நடத்திய கடுமையான தாக்குதலாலேயே அருணாச்சலம் உயிரிழந்ததாக அவரது உறவினர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். மேலும் இதற்கு காரணமான அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, அவர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தற்போது இந்த சம்பவம் தொடர்பாக தென்பாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் விசாரணை கைதி அருணாச்சலம் மரணம் தொடர்பாகதூத்துக்குடிமாவட்ட காவல்துறை விளக்கம் அளித்துள்ளது.

வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளதாவது:- கடந்த 17.07.2026 அன்று, தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில், தூத்துக்குடி அமுதா நகர் பகுதியைச் சேர்ந்த அருணாசலம் (24) என்பவர் மதுவிலக்கு அமலாக்க சோதனையின்போது 180 மில்லிலிட்டர் அளவிலான 120 மதுபான பாட்டில்களை சட்டவிரோதமாக வைத்திருந்தது கண்டறியப்பட்டதால், தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய குற்ற எண். 751/2026 ச/பி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் பிரிவுகள் 4(1)(A) மற்றும் 14 -ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட பின்னர், சட்டப்படி பின்பற்றப்பட வேண்டிய அனைத்து நடைமுறைகளும் முறையாக கடைபிடிக்கப்பட்டன. அவரது உடல் சோதனையானது, காணொளி பதிவு செய்யப்பட்டு,கைது செய்யப்பட்ட விபரம் அவரது குடும்பத்தினருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

17.07.2026 அன்று மாலை சுமார் 5.50 மணியளவில், அவரை தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டது. பரிசோதனை மேற்கொண்ட டாக்டர்,அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தகுதியுடையவர் என சான்றளித்ததுடன், அவரது உடலில் எந்தவித வெளிப்புறக் காயங்களும் இல்லை என்றும் மருத்துவ சான்றிதழில் சான்றளித்தார்.

சட்ட மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக அவர் மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, அப்போது காவல் நிலையத்தில் இருந்த பிற கைதிகளுடன் காவல் நிலைய லாக்-அப்பில் வைக்கப்பட்டார். லாக்-அப்பில் இருந்த போது, மற்ற கைதிகளுடன் இயல்பாக நின்று பேசிக் கொண்டிருந்த அவர், திடீரென தானாகவே மயங்கி கீழே விழுந்தார்.

இச்சம்பவம் லாக்-அப்பின் முன்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. இதையடுத்து,காவல்துறையினர் உடனடியாக அவருக்கு தேவையான உதவிகளை செய்து, குடிநீர் வழங்கி, பாதுகாப்பாக அமர வைத்தனர். காவல் நிலைய வரவேற்பு பகுதியிலிருந்த அவரது தாயாரும் உடனடியாக அழைக்கப்பட்டார்.

அதன்பின்னர், மருத்துவமனை அருகே அவர் மீண்டும் மயங்கி விழுந்ததாகஅவரது உறவினர்கள், காவல்துறையினருக்கு தெரிவித்தனர். தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். சிகிச்சையின் போது, அவருக்கு மருத்துவ நடைமுறை மேற்கொள்ளப்பட்டது.இருப்பினும், அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல், 23.07.2026 அன்று அவர் இறந்ததாக டாக்டர்களால் அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக, அவரது தந்தை அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சட்டப்படி விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் தென்பாகம் காவல் நிலையத்தில் அருணாச்சலம் மயங்கி விழுந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 17ஆம்தேதி இரவு 8.38க்கு காவல் நிலையத்தில் அருணாச்சலம் மயங்கி விழுந்த வீடியோவை மாவட்ட காவல்துறை வெளியிட்டது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்

24.07.2026

# இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனம்

டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்ட காரர்கள் மீது தடியடி நடத்த பட்டதற்கு மக்கள் எழுச்சி மாகதடியடி நடத்தியதை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிகவும் வண்மையாக கண்டிக்கிறது. உரிய பாதுகாப்பும் வழங்கி நியாமான கோரிக்கைகள் என்னவென்று பார்த்து நிறை-



ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

நீட் தேர்வு முறைகேடு விவகாரத்தில் நீதிகிடைக்கவேண்டியும் , ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி நீக்கம் செய்ய கோரியும் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அமைதியான வழியில் போராட்டத்தை முன் எடுத்து போராடி வந்தனர்.

இந்த நிலையில் நடைபெற்று கொண்டியிருந்த போராட்டத்தை களைபதற்க்காக இளைஞர்கள் மீது காவல்துறையினர் காட்டு மிராண்டி தனகாவல் துறையினர்கள் இளைஞர்கள் மீது தடியடி நடத்தியதில் 100கும் மேற்ப்டோர்கள் காயம் அடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்க பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். என்கிற செய்தி மிகுந்த வேதனை அளிக்கிறது . மேலும் உடலில் காயம் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வரும் இளைஞர்களுக்கு அனைத்து விதமான மருத்துவ செலவுகளை ஒன்றிய அரசு பொறுப்பு ஏற்க்க வேண்டும்.

ஒன்றிய .மாநில அரசுகளிடம் நியாமான கோரிக்கைகளை முன் நிறுத்தி பொது மக்கள் போராடுவது ஜனநாயக உரிமை.

ஜனநாயக ரீதியாக போராடும் இளைஞர்களுக்கு அனுமதியும் வேற்றுவது ஆளும் அரசுகளின் கடமை இதனை செய்யாமல் போராட்ட காரர்கள் மீது காவல் துறையினரை ஏவி விட்டு போராடும் இளைஞர்கள் மீது தடியடி நடத்துவது ஆளும் அரசின் சர்வதாகரத்தின் உச்சம்.

எனவே : உச்ச நீதி மன்ற நீதிபதிகளின் தலைமையில் உடனடியாக விசாரனையை கொண்டு அமைதியான வழியில் போராடிய இளைஞர்கள் மீது தடியடி நடத்த உத்தரவிட்ட மற்றும் அதற்கு காரணமான அதிகாரிகள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

## தூத்துக்குடியில் போக்குவரத்து விதிகளை மீறி இயக்கப்பட்ட

# தனியார் பேருந்துக்கு ரூ.13 அபராதம் விதித்து போக்குவரத்து காவல்துறையினர் நடவடிக்கை



தூத்துக்குடி - திருநெல்வேலி பிரதான சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே, தூத்துக்குடி மாநகரப் போக்குவரத்து காவல் ஆய்வாளர் சுணை முருகன் தலைமையில் காவல்துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது முடிவைத்தானத்திலிருந்து தூத்துக்குடி நோக்கி வந்த தனியார் பேருந்தை நிறுத்திச் சோதனை செய்தனர். அப்பரிசோதனையில் அதிக ஒலி எழுப்பும் 6 ஏர் ஹாரன்கள், 2 அகுஜா ஸ்பீக்கர் பாக்ஸ்கள் பொருத்தியிருந்தது கண்டறியப்பட்டது. அரசு விதிமுறை களை மீறிப் பேருந்துக்கு கலர் பெயிண்ட் அடித்திருந்தது உட்படப் பல்வேறு விதிகளை மீறியது உறுதியானது. இதையடுத்து போக்குவரத்து காவல்துறையினர் அப் பேருந்துக்கு ரூ.13,000 அபராதம் விதித்தனர். ஒரே பேருந்துக்கு ரூ.13,000 அபராதம் விதிக்க ப்பட்ட சம்பவம் தனியார் பேருந்து உரிமையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மாவட்ட சிறுபான்மைத்துறை அதிகாரியை முஸ்லிம் லீக் நிர்வாகி சந்திப்பு

ராணிப்பேட்டை மாவட்ட சிறுபான்மை துறை அதிகாரி திருமதி மீனா அவர்களை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட இளைஞர்அணிசெயலாளர் பி.எஸ். முஸ்தபா கிலானி இன்று மரியாதைநிமித்தமாக சந்தித்தார்.



அப்போது, மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மை மக்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படும் அரசின் நலத்திட்டங்கள் முழுமையாக சென்றடைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். மேலும், கல்வி, சுயதொழில், வேலைவாய்ப்பு உள்ளிட்ட நலத்திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமாகவும், சிறுபான்மை மக்களின் நலன் தொடர்பான கருத்துப் பரிமாற்றத்துடனும் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்ட கஞ்சா தடுப்பு சிறப்பு நடவடிக்கையின் போது, ஒடிசா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு கடத்தி வரப்பட்ட சுமார் 28 கிலோ கஞ்சா போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கு தொடர்பாக காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில், பள்ளி அளவிலான கேரம் போட்டி

தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்பள்ளி அளவிலான கேரம் போட்டிகள் உற்சாகமாக நடைபெற்றன.



போட்டிகளை பள்ளியின் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தொடங்கி வைத்தார். நடுநிலைப்பள்ளிமாணவர்களுக்கான 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆண்கள் தனிநபர் பிரிவில் எட்டாம் வகுப்பு மாணவர் சரண்குமார் முதல் இடத்தையும், ஏழாம் வகுப்பு மாணவர் முகித் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். பெண்கள் தனிநபர் பிரிவில் ஆறாம் வகுப்பு மாணவி ஏஞ்சல் ஜாய் முதல் இடத்தையும், எட்டாம் வகுப்பு மாணவி மோனிகா இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆசிரியர் ஸ்ரீதர் சிறப்பாக செய்திருந்தார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளி சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், இம்மாணவர்கள் வட்டார அளவில் நடைபெறவுள்ள கேரம் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

# கோவையில் ஜூலை 25ஆம் தேதி சர்வதேச எம்.பி.பி.எஸ். பிரதிநிதிகள் மாநாடு கோவையில் நடைபெற உள்ளது

முல்லை அகாடமியா இன்டர்நேஷனலின் வெளிநாட்டு கல்விப் பிரிவானஅரோராஓவர்சீஸ் எஜுகேஷன் சர்வீசஸ், மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த முன்னணி மருத்துவப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, சர்வதேச எம்.பி.பி.எஸ். பிரதிநிதிகள் மாநாடு 2026-ஐ ஜூலை 25ம் தேதி, கோவை தி கிராண்ட் ரீஜென்ட் ஹோட்டலில் நடத்துகிறது. இதுகுறித்த அறிவிப்பு கோவையில் நடைபெற்றது அப்பொழுது செய்தியாளர்களை சந்தித்த, அரோரா ஓவர்சீஸ் எஜுகேஷன் சர்வீசஸ் நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் விஜய்சங்கர் அசோகன் கூறியதாவது.



வெளிநாடுகளில் எம்.பி.பி.எஸ். படிக்க விரும்பும் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கு சரியான மற்றும் நம்பகமான வழிகாட்டுதலை வழங்கும் நோக்கில் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவப் பல்கலைக்கழகங்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளை நேரடியாகச்சந்தித்து, சேர்க்கை நடைமுறை, தகுதித் தரங்கள், கல்விக் கட்டணம், கல்வி உதவித்தொகைகள், விடுதி வசதிகள், விசா நடைமுறைகள், மருத்துவ உரிமத் தேர்வுகள் மற்றும் பட்டப்படிப்புக்குப் பிந்தைய தொழில் வாய்ப்புகள் குறித்து முழுமையான விளக்கங்களைப் பெறலாம்.

மேலும், தகுதியான மாணவர்களுக்கு மாநாட்டு வளாகத்திலேயே உடனடி சேர்க்கை வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய மாணவர்களுக்கான சர்வதேச கல்வி உதவித்தொகைகள் மற்றும் உலகளவில் அங்கீகாரம் பெற்ற மருத்துவக்கல்வியின் சிறப்புகள் குறித்தும் நிபுணர்கள் விளக்கமளிக்க உள்ளனர்.

இம்மாநாட்டில் பிலிப்பைன்ஸின் செயின்ட் பால் பல்கலைக்கழகம், மலேசியாவின் யுனிவர்சிட்டி ஆஃப் சைபர்ஜெயா, மஹ்சா பல்கலைக்கழகம் மற்றும் எஸ்.எம்.எஸ். பீனிக்ஸ் குளோபல் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கவுள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள், பெற்றோர் மற்றும் வெளிநாடுகளில் மருத்துவம் படிக்க விருப்பமுள்ள அனைவரும் இம்மாநாட்டில் பங்கேற்று தனிப்பட்ட ஆலோசனைகளையும், பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன் நேரடியாக கலந்துரையாடும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் மருத்துவக் கல்வி தொடர்பாக மாணவர்களும் பெற்றோர்களும் துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களைப் பெறுவதற்கான சிறந்த தளமாக இந்த மாநாடு அமையும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் அரோரா ஓவர்சீஸ் எஜுகேஷன் சர்வீசஸின் சர்வதேச ஆலோசனை உறுப்பினர் டாக்டர் பிரசன்னா அசோகன் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி மாவட்ட புதிய எஸ்.பி.யாக சிவபிரசாத் நியமனம்




தூத்துக்குடி மாவட்ட எஸ்பி அபிஷேக் குப்தா பணியிட மாற்றம் செய்யப்பட்டு புதிய எஸ்பியாக சிவபிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் 5 ஐ.பி.எஸ். அதிகாரிகளைப் பணியிட மாற்றம் செய்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக சிவபிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக அபிஷேக் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை டி.ஜி.பி. அலுவலகக் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக மீரா ஐ.பி.எஸ். நியமனம் செய்யப்பட்டுள்ளார். இப் பணியிட மாற்றங்கள் குறித்த அதிகாரப்பூர்வ உத்தரவை உள்துறைச் செயலகம் வெளியிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்ட புதிய எஸ்பி சிவபிரசாத் கர்நாடகமாநிலம்,பெங்களூருவை சேர்ந்தவர்.2016ல் ஐ.பி.எஸ்.,தேர்ச்சி பெற்று விருதுநகரில் உதவி எஸ்.பி., யாக பணியை துவக்கினார். மதுரை, சென்னை வண்ணாரப்பேட்டை, அண்ணாநகரில் துணை கமிஷனராக பணிபுரிந்தார். மதுரை, தேனி எஸ்.பி.,யாக இருந்துள்ளார்.

# 7 மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரிக்கும் வானிலை ஆய்வு மையம்



ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது.

இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும்பலத்தகாற்றுடன்(மணிக்கு40முதல்50கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை மற்றும் நாளை மறுநாள் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் புதுவையிலும் இடி மின்னல்மற்றும்பலத்தகாற்றுடன்(மணிக்கு40முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு40முதல்50கிலோமீட்டர்வேகத்தில்)கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

26-ந்தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலோர தமிழகம், வட உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும்இடி மின்னல்மற்றும்பலத்தகாற்றுடன் (மணிக்கு40முதல்50கிலோமீட்டர்வேகத்தில்)கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

27-ந்தேதி முதல் 29-ந்தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

வெப்பநிலை

இதனிடையே இன்று முதல் 27-ந்தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஈரோடு, கரூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 2-4°செல்சியஸ்இயல்பைவிடஅதிகமாகவும்,ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இயல்பை ஒட்டியும் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை/ இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36-37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகராட்சி, சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற தூய்மை பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமில் தூய்மைப் பணியாளர்களுக்கு தொழில் பாதுகாப்பு மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கான உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல், பெருந்துறை நகராட்சி ஆணையாளர் (பொ) கருணாம்பாள், நகர்மன்றத் தலைவர் ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகராட்சி, சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற தூய்மை பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமில் தூய்மைப் பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல், பெருந்துறை நகராட்சி ஆணையாளர் (பொ) கருணாம்பாள், நகர்மன்றத் தலைவர் ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

# ஆற்காடு வட்டாரத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்



ஆற்காடு வட்டாரத்தில் காரீப் 2026 பருவத்திற்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (PMFBY) கீழ், வாழை மற்றும் மஞ்சள் ஆகிய தோட்டக்கலைப் பயிர்களுக்கு 14 கிராமங்கள் அறிவிக்கைசெய்யப்பட்டுள்ளதாக ஆற்காடு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு.ப.மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, வாழை பயிருக்கு ஏக்கருக்கு 62,700 காப்பீட்டுத் தொகையும், 3,135 பிரிமீயமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மஞ்சள் பயிருக்கு ஏக்கருக்கு 59,400 காப்பீட்டுத் தொகையும், 2,970 பிரிமீயமும் நிர்ணயி க்கப்பட்டுள்ளது.

பயிர் காப்பீட்டிற்கான பிரிமீயம் செலுத்த வேண்டிய கடைசி நாள் 15.09.2026 ஆகும்.

விஷாரம் குறு வட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள அரப்பாக்கம், மேலகுப்பம், டி. சி.குப்பம், கீழ்மின்னல், நந்தியாலம், மேல்விஷாரம், ஆயிலம், அருங்குன்றம், கீழ்குப்பம், கத்தியவாடி, கூரம்பாடி, தாளனூர், இராசாத்துபுரம் மற்றும் வேப்பூர் ஆகிய கிராமங்களில் வாழை மற்றும் மஞ்சள் பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், 15.09.2026-க்குள் அருகிலுள்ள பொது சேவை மையங்கள் (CSC), தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பயிர் காப்பீடு செய்யும்போதுஆதார்அட்டை, வங்கிக் கணக்குப் புத்தக நகல், நில ஆவணங்கள் மற்றும் பயிர் சாகுபடி தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

வாழை மற்றும் மஞ்சள் பயிர்களை சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பயிர் காப்பீடு செய்து, இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்புகளிலிருந்து பாதுகாப்பு பெற்று பயனடையுமாறு ஆற்காடு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு. ப. மணிகண்டன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆலங்குளம் ஸ்டார் திறன் மேம்பாட்டு மையத்தில் இலவச தையல் பயிற்சி தொடக்க விழா



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில், லீபனோன் டிரஸ்ட் கீழ் செயல்பட்டு வரும் ஆலங்குளம் ஸ்டார்திறன் மேம்பாட்டு மையம் சார்பில் இலவச தையல் பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு புதுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பாலவிநாயகம் தலைமை தாங்கினார்.

மக்கள் நலப்பணியாளர் திராவிடமணி முன்னிலை வகித்தார்.

மையத்தின் நிறுவனர் வளர்மதி வரவேற்புரை வழங்கி அனைவரையும் வரவேற்றார். போதகர் ஜான் சங்கர் கடவுள் வணக்கம் செலுத்தியதுடன் இலவச தையல் பயிற்சி வகுப்புகள் தொடங்கி வைக்கப்பட்டன.

விழாவில் தென்காசி மாவட்ட தொழில் மையத்தின் உதவி பொறியாளர் செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு,தமிழக அரசின்தொழில்முனைவோர் மானியக் கடன் திட்டங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும், தமிழ்நாடு மகளிர்தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் தொடர்பாக பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி,

அரசு வழங்கும் சலுகைகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

இந்த இலவச தையல் பயிற்சியின் மூலம் பெண்கள் தன்னம்பிக்கையுடன் சுயதொழில் தொடங்கி பொருளாதார முன்னேற்றம் அடைய வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன இதில் ஆசிரியர் கௌசல்யா, உலகம்மாள், மற்றும்ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளூரில் ஒருங்கிணைந்த கால்நடைத்தீவன மேம்பாட்டுத் திட்டம் விழிப்புணர்வு



வெள்ளூர் பஞ்சாயத்தில் ஒருங்கிணைந்த கால்நடைத் தீவன மேம்பாட்டுத் திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சி வெள்ளூர் பஞ்சாயத்தில் சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் ஒருங்கிணைந்த கால்நடைத் தீவன மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிவகாசி வட்டார நடமாடும் கால்நடை மருத்துவர் . கருப்பசாமிசிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்கள் மற்றும்விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பின் அவசியம்,சத்தானதீவன வகைகள், சமச்சீர் தீவன மேலாண்மை, கால்நடைகளின் ஆரோக்கிய பராமரிப்பு, நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

மேலும், தரமான தீவனங்களை பயன்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பது, கால்நடைகளின்வளர்ச்சியை மேம்படுத்துவது மற்றும் கால்நடை வளர்ப்பை இலாபகரமான தொழிலாக மாற்றுவது தொடர்பாக பயனுள்ள ஆலோசனைகளையும் வழங்கினார்

## தமிழ்நாடு கைத்தறி, துணி நூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி

# தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு நலத்திட்ட முகாமினை தொடங்கி வைத்தார்



ஈரோடு மாநகராட்சி மண்டலம் -4, ஏ.எம் திருமண மண்டபம் மற்றும் மண்டலம் -2, மல்லிகை அரங்கம் ஆகிய இடங்களில் கைத்தறி, துணி நூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ,தூய்மை பணியாளர்களின் மேம்பாட்டு திட்ட (SWDS) முகாமினை (22.07.2026) அன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமை வகித்தார். ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், , ஈரோடு மாநகராட்சி துணைமேயர் வே.செல்வராஜ், துணை ஆணையாளர் செந்தில் குமார் ரத்தினம், மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இம்முகாமில் நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியம், தாட்கோ, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, பள்ளிக்கல்வித்துறை,சமூக நலன், வீட்டு வசதி துறை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை, தொழிலாளர் நலன், வருவாய் துறை, ஆதார் மற்றும் டிஜிட்டல் சேவைகள், கனரா வங்கி மற்றும் முன்னணி வங்கிகள், மாற்றுத் திறனாளிகள் நலன் ஆகிய துறைகள் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

1370 மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும்அவர்கள் குடும்பத்தினர், 40 தனியார் துறை தூய்மைபணியாளர்களென மொத்தம் 1410 பயனாளர்கள் முகாமில் பயனடைந்தனர். இதில் 199 பயனாளிகளுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான ஆவணங்களை மாண்புமிகு கைத்தறி துணி நூல் மற்றும் காதித்துறை அமைச்சர் திரும.விஜய் பாலாஜி அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் நான்கு மண்டல உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள்,சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## டெல்லியில் போராட்டம் நடத்தி வரும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆதரவாக

# மதுரையில் ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் ரெயில் மறியல் போராட்டம்



நீட் தேர்வில் நடைபெற்றுள்ள முறைகேடுகளுக்கு எதிராகவும், நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும் டெல்லியில் போராட்டம் நடத்தி வரும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆதரவாக, மதுரையில் ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் ரயில் மறியல் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பாலக்காட்டில் இருந்து திருச்செந்தூர் செல்லும் ரயிலை திருப்பரங்குன்றம் ரயில் நிலையம் அருகே மறிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்தை முற்றுகையிட்டு ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக DYFI மற்றும் தோழமை அமைப்புகளைச்சேர்ந்தநிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரண்டு வந்தனர். அப்போது, பாதுகாப்பு பணியில்ஈடுபட்டிருந்தகாவல்துறையினர் ரயில் நிலையத்திற்குள் நுழைய முயன்ற போராட்டக்காரர்களை தடுப்புகளை அமைத்து மறித்து நிறுத்தினர். காவல்துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதமும் லேசான தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. மத்திய அரசு மற்றும் நீட் தேர்வுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பிய போராட்டக்காரர்கள், தடுப்புகளை மீறிச் செல்ல முயன்றதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது. இன்னும் சற்று நேரத்தில் பாலக்காட்டில் இருந்து திருச்செந்தூர் செல்லும் ரயில் திருப்பரங்குன்றம் ரயில்நிலையம் வர உள்ள நிலையில் மதுரை ரயில் நிலையத்தில் இருந்தும் சிலர் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக ரயிலிலேயே பயணித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இப்போராட்டம்காரணமாக திருப்பரங்குன்றம் ரயில் நிலைய பகுதியில் சிறிது நேரம் பதற்றமும் கடும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

# காசோலை மோசடி வழக்கில் நடிகர் விமலுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை



சென்னை: காசோலை மோசடி வழக்கில் நடிகர் விமலுக்கு ஓராண்டு சிறைத்தண்டனைவிதித்து சென்னை சிறு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2018-ம் ஆண்டு நடிகர் விமல் நடிப்பில் வெளியான திரைப்படம் 'மன்னர்வகையறா'.இப்படத்தில் நடிகர் பொன்வண்ணன், நடிகை சரண்யா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படத்தை ஜி.பூபதி பாண்டியன் எழுதி இயக்கியுள்ளார். இப்படத்தை நடிகர் விமல் தயாரித்துள்ளார். இந்த படத்திற்காக பைனான்சியர் கோபி என்பவரிடம் இருந்து ரூபாய் 4.5 கோடி கடனாகப் பெற்றுள்ளார். திரைப்படம் வெளியாகி பல ஆண்டுகள் கடந்த போதிலும் ஃபைனாசியரிடம் வாங்கிய தொகையை அவர்திருப்பித்தரவில்லை என்றகுற்றச்சாட்டுஎழுந்தது.

இந்தநிலையுில்இவ்வழக்கில் நீதிபதி ஆர்த்தி இன்று தீர்ப்பு அளித்தார். அதில்,"விமலுக்குஎதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே, அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கிறேன். வாங்கிய தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்"என்றுதீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, நடிகர் விமலின் வழக்கறிஞர் தரப்பில், "இந்த வழக்கில் மேல்முறையீடு செய்யவுள்ளதாகவும், அதுவரை தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும்" எனக் கோரியும் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, தண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டார்.

## ஆலங்குளத்தில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



ஆலங்குளம் வட்டார தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் செயல்திட்ட முடிவின்படி முற்றிலுமாக ஆசிரியர் தகுதி தேர்வை ரத்து செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆலங்குளம் வட்டார கல்வி அலுவலகம் முன்பு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்திற்குதமிழ்நாடுதொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தென்காசி மாவட்ட தலைவரும் ஆலங்குளம் வட்டார செயலாளருமான ஆரோக்கிய ராசு தலைமை வகித்தார் தலைமை ஆசிரியர் கண்ணன் முன்னிலை வகுத்து பேசினார் ஆசிரியர் அந்தோணிசாமி அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்த மாலை நேர கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்

பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வில்இருந்துவிலக்கு அளிக்க வேண்டும் தமிழகத்தில் நடந்து முடிந்த ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதி தேர்வை ரத்துசெய்திட வேண்டும் தமிழக அரசு வரும் சட்டமன்றகூட்டத்தொடரில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தகுதி தேர்வு தேவையில்லை என தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்திய பாராளுமன்றத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்களிக்க சட்டம் இயற்ற அழுத்தம் கொடுக்க வேண்டும் ஆசிரியர் தகுதி தேர்வில் பணி அனுபவத்தை கணக்கில் கொண்டு வெயிட்டேஜ் மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைமுழக்கங்கள் எழுப்பப்பட்டது கோரிக்கைகளை விளக்கி மாவட்ட தலைவர் ஆரோக்கிய ராசு விரிவாக பேசினார்

மேலும் ஆசிரியர்கள் பேச்சியப்பன் கண்ணன் உட்பட பலர் பேசினர் இறுதியில் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் அருணாசலம் நன்றி கூறினார் இந்த ஆர்ப்பாட்டத்தில் 100 ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

### கோவை வெங்கீஸ் பயிற்சி மைய மாணவி அனு ஸ்ரீ

## சீனாவில் நடைபெறவுள்ள ஆசியன் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்




கோவையில் இருந்து ஆசிய அளவிலான பேட்மின்டன் போட்டிக்கு தேர்வாகியுள்ள மாணவிக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்ற நிலையில், கோவை வெங்கீஸ் பயிற்சி மைய மாணவி அனு ஸ்ரீ, இந்தியாவிற்காக பதக்கங்கள் வெல்வதே இலக்கு என்று உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 10-ம் வகுப்பு மாணவி அனு ஸ்ரீ, தற்போது கோவை காளப்பட்டியில் செயல்பட்டு வரும் வெங்கீஸ் பேட்மின்டன் பயிற்சி மையத்தில் தீவிர பயிற்சி பெற்று வருகிறார். தனது விடாமுயற்சி மற்றும் தொடர்ச்சியான பயிற்சியின் பலனாக, செப்டம்பரில் சீனாவில் நடைபெறவுள்ள ஆசியன் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக பேட்மின்டன் விளையாட்டில் முழு கவனத்துடன் பயிற்சி மேற்கொண்டு வரும் அனு ஸ்ரீ, மாநில மற்றும் தேசிய அளவிலான பல்வேறு போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக ஜெய்ப்பூர் மற்றும் பெங்களூருவில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான பேட்மின்டன் போட்டிகளில் வெற்றி பெற்று தனது திறமையை நிரூபித்துள்ளார்.

இதுகுறித்து அனு ஸ்ரீ கூறுகையில், "இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி ஆசியன் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது மிகவும் பெருமையாக உள்ளது. தினமும் 6 மணி நேரம் கடுமையான பயிற்சி பெற்று வருகிறேன்.

இந்த போட்டியில் இந்தியாவுக்காக பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே எனது மிகப்பெரிய இலக்கு. அதன்பிறகு மேலும் பல சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு நாட்டிற்கு பெருமை சேர்க்க விரும்புகிறேன்," என்றார். இந்த பேட்டியின் பொழுது பயிற்சியாளர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.

## நாடாளுமன்ற வளாகத்தில் ஒரே நேரத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிரெதிரே போராட்டம்



நீட் தேர்வு குளறுபடிகளுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்எனவலியுறுத்தி நடத்தப்பட்ட போரா ட்டம் தீவிரம் அடை ந்துள்ளது. நாடாளுமன்றத்தில் நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்துஎதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகிறார்கள். கடும் அமளி நீடித்தது.பிரதமர் மோடி தனது எக்ஸ் பதிவில், வினாத்தாள் கசிவு விவகாரத்தில் குற்றவாளிகள் தப்ப முடியாது என்றும் வினா த்தாள் கசிவு விவகாரத்தில் விரைவு நீதிமன்ற ங்கள் மூலம் நீதி கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும் உறுதியளித்தார். மோடியின் இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டன. இதற்கிடையே இன்று நாடாளுமன்றம்கூடும்முன்பாக தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி எம்பிக்கள் போராட்டம் நடத்திய அதே நேரத்தில் ஆளும் கூட்டணி எம்பிக்களும்போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அதேநேரத்தில் நீட் தேர்வைரத்துசெய்ய வலியுறுத்தி திமுக எம்பிக்கள் தனியாக போராட்டம் நடத்தினர்.காங்கிரஸ்உடன் கூட்டணியை முறித்துக்கொண்ட திமுக, நாடாளுமன்ற வளாகம் அருகே தனியாக போராட்டத்தில்ஈடுபட்டது.



### செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியத்துக்குட்பட்ட கீழ் மருவத்தூர் கிராமத்தில்

## பழுதடைந்த சாலையை சீரமைக்கக்கோரி ஜல்லி கற்கள் பொறுக்கும் போராட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியத்துக்குட்பட்ட கீழ் மருவத்தூர் கிராமத்தில் 500க்கும் மேற்பட்ட வீடுகளில், பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், இந்த கிராமத்துக்கு செல்லும் பிரதான சாலை கடந்த பல மாதங்களாக சேதமடைந்து ஜல்லி கற்கல் பெயர்ந்தும்மற்றும்பள்ளங்களாக காட்சியளித்து வருகிறது. இதனால், இச்சாலையில் செல்லும் அப்பகுதி பொதுமக்கள் வாகனங்களில் செல்லும்போது விபத்துகளில் சிக்கி காயமடைந்து வருகின்றனர். மேலும், பாதசாரிகள் நடந்து செல்ல முடியாத அளவுக்கு ஜல்லி கற்கல் பெயர்ந்துள்ளதால், பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். அதனால், மேற்கண்ட சாலையை சீரமைக்க வேண்டும் என வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பலமுறை மனு வழங்கியும் நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளதாககூறப்படுகிறது. இந்நிலையில், மேற்கண்ட சாலையை சீரமைக்காததை கண்டித்து,

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், அனைத்து இந்திய ஜனநாயக மாதர் சங்கம், விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் ஜல்லி பொறுக்கும் போராட்டம் நேற்று நடைபெற்றது.

விவசாய தொழிலாளர் சங்கத்தின்செய்யூர்வட்ட தலைவர் ஸ்டாலின்குமார்தலைமையில்நடைபெற்ற போராட்டத்தில் அனைத்திந்திய ஜனநாயக மாதர்சங்க மாவட்ட பொருளாளர் S.நவரத்தினம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டத் தலைவர் ச.ஜீவானந்தம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்யூர் வட்ட செயலாளர் க. புருஷோத்தமன், மாவட்ட குழு உறுப்பினர் வெள்ளிகண்ணன்,வட்டக்குழு உறுப்பினர் ஐயப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

போராட்டத்தை தொடர்ந்துசம்பவ இடத்திற்கு வந்த சித்தாமூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்நீ பேச்சுவார்த்தையில் சும்மா 90 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு அரசுக்கு அனுப்பி வைத்திருப்பதால் மிகவிரைவில் இந்த சாலை அமைக்கப்படும் என தெரிவித்ததன் அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

## கோவை பாப்பம்பட்டி பகுதியில் எல்ஜி மருத்துவமனையின் 24 மணி நேர க்ளினிக் திறப்பு



கோவை மாவட்டம் சூலூர் அடுத்த பாப்பம் பட்டி அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஏற்படும் விபத்துகளால், அதிக அளவில் இரத்த போக்கு ஏற்பட்டு பின்னர் மருத்துவமனைக்கு வரும் நிலை உள்ளது! இதனை கட்டுப்படுத்த கோவை பாப்பம் பட்டி பகுதியில்எல்ஜி மருத்துவமனையின் 24 மணி நேர க்ளினிக் துவங்கபட்டுள்ளதாக எல்ஜி மருத்துவமனையின் தலைமை மருத்துவர் பேட்டி

கோவை மாவட்டம் சூலூர் அடுத்த பாப்பம் பட்டி பகுதியில், எல்ஜி மருத்துவமனையின், 24 மணி நேர க்ளினிக் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை, வசந்தா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிதம்பர நாதன், ரிப்பன் வெட்டியும் குத்துவிள க்கேற்றி வைத்தும் துவக்கி வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய எல்ஜி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் கோபிநாத், மற்றும் எல்.ஜி மருத்துவமனையின் தலைமை மருத்துவரும், மருத்துவமனையின் நிர்வாக இயக்குநருமான லதா கோபிநாத் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. கோவை சூலூர் பகுதியில் கடந்த 5 ஆண்டுகளாக, எல்ஜி மருத்துவமனை இயங்கி வருகின்றது. இங்கு சூலூர், பாப்பம் பட்டி, பட்டணம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிகமான, தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றது. இங்கு சுமார் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இங்கு ஏற்படும் விபத்துகளால், அவர்கள் மருத்துவமனைக்கு வருவதற்குள் அதிகமான இரத்த போக்கு ஏற்படுகின்றது. இதனை கருத்தில் வைத்து, இந்த பகுதியில் 24 மணி நேர க்ளினிக் துவங்கபட்டுள்ளது. இந்த க்ளினிக்கில் 24 மணி நேரமும் அவசர சிகிச்சைக்காக மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தகம்,தயார் நிலையில் இருக்கும், எந்த வித அவசர சிகிச்சையாக இருந்தாலும் மருத்துவர்கள் உடனுக்குடன், அவர்களை பார்த்து முதலுதவி வழங்குவார்கள் என்று கூறினார். மேலும் இங்கு தமிழக அரசின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்க படும் என்றும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், எல்ஜி மருத்துவமனையின் எக்கோமெஷின்மேளாளர் ஓம் பிரகாஷ், சாந்தி பீட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் குணசேகரன், ஹெச் ஆர் மேளாளர் ராதாமணி, மற்றும் கிருஷ்ணா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## From meals to medicines: Gurdwaras, food outlets assisting protesters in need



*Gurdwara Bangla Sahib offering food and shelter to people in need at the Jantar Mantar, Blue Tokai, a well-known coffee shop, providing first-aid kits and other essentials to the injured and Kona, a food oultet sending 1,000 sandwiches - several establishments across Delhi have lent a helping hand to protesters camping at the historic protest site. Staffers at Gurdwara Bangla Sahib, two kilometres away from Jantar Mantar, said thousands of protesters reached the shrine on Monday night and were allowed to take shelter, as its doors are open to everyone irrespective of religion, caste or gender.*

*"We stopped the police at the gate. We didn't allow them to touch a single person once they were inside. It's part of our seva to protect anyone who seeks refuge inside the gurdwara," said a staffer requesting anonymity. The staffer said those who reached the gurdwara also included children and women, and most of them were drenched in rain. "We serve langar to thousands every day, and one automatic chapati machine is usually enough. But on the intervening night of Monday and Tuesday, two chapati machines were put into operation and served langar throughout the night," he added. Harmeet Singh Kalka, president of Delhi Sikh Gurdwara Management Committee, an autonomous body managing Sikh places of worship, said around 10,000 protesters arrived at Gurdwara Bangla Sahib on Monday night, and people keep visiting the shrine particularly at night. "We offer protection irrespective of the person's background. But this doesn't mean we support them. The protestors are free to use all facilities like food, medical aid and shelter, just like others who turn to gurdwaras. We aren't sending any food, as they (organisers) are saying that they have plenty of food at the site (Jantar Mantar). No special arrangement has been done, and no one has reached out to us as of now from the organisers," Kalka said. Gurdwara Rakab Ganj Sahib, near Parliament House and over 3 km away from Jantar Mantar, also saw protesters arrive on Monday night.*

*Rohit Kumar, 21, a sanitary worker at the gurdwara, said a few protesters arrived around 10 pm on Monday seeking a place to rest. "Some protesters came on Monday night asking for shelter. It appeared they were not from Delhi, as they were carrying their belongings and had arrived barefoot. I told them they could go to Bangla Sahib, or use our hall to rest. I also informed them that they could have food at the langar hall," Kumar said.*

*For several protesters, gurdwaras have become places to recover, rest, find relief, and have food. "The protest site is packed. I have been coming to Bangla Sahib Gurudwara since the night of July 20. I take a bath, have food and rest for a while. I head back to the protest site," said Manish Kumar, 23, who travelled from Patna.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.